# அருணாசலக்கவியின் இராம நாடகக் கீர்த்தனை

**கலாநிதி திருமதி சுகன்யா அரவிந்தன்,**
விரிவுரையாளர்,
இசைத்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,
*saravintnon@hotmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

இயல், இசை, நயம் மிக்க இசைநாடகமென்னும் பிரிவில் மேலோங்கிப் பலகாலமாக எல்லோராலும் போற்றப்பட்டும் மேடைகளில் நாட்டிய நாடகமாகவும், இசைக்கச்சேரிகளில் தனிப்பாடல்களாகவும் அரங்கேற்றப்பட்ட ஒரு இசை நாடகம் அருணாசல கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனை. இராம நாடகக் கீர்த்தனையில் உள்ள இசைப்பாடல்கள் வெவ்வேறு வகையினைச் சேர்ந்தனவானாலும் இராமருடைய புகழைப் பாடுவதால் கீர்த்தனைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் "நாடகக் கீர்த்தனை" என்றே பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இராம நாடகக் கீர்த்தனையில் அருணாசல கவிராயர் கையாண்டுள்ள இசைப்பாடல் வகைகள் பற்றியும் பின்னர் எழுந்த இசை நாடகங்களுக்கு அருணாசல கவிராயர் முன்னோடியாக விளங்கியமை குறித்தும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள் :** இசைநாடகம், தரு, விருத்தம், கீர்த்தனை, தமிழிசைவரலாறு

**ஆய்வு அறிமுகம்**

தமிழிசை வரலாற்றுக்காலம் மிகவும் நீட்சிகொண்டது. காலந்தோறும் தோற்றம்பெற்ற இசைவாணர்கள் தத்தம் இசை விருப்புக்களுக்கும் விற்பன்னங்களுக்கேற்ப தாம் பெற்ற அனுபவங்களையும் கலந்து பல இசைவடிவங்களை யாத்திருக்கின்றமை வரலாறு சுட்டும் உண்மை. இந்த வகையிலே தமிழ்ப் பண்பாட்டுவரலாற்றிலே குறிப்பிட்டுக்கூறக்கூடியவர் அருணாசலக்கவிராயர் அவர்கள். இவர் பல இசைவடிவங்களை யாத்திருப்பினும் இவரது இராமநாடகம் தமிழிசை வரலாற்றிலே முக்கியமான ஒரு படைப்பாகக் கருதப்படுகின்றது. தமிழிசை நாடகங்களுக்கு முதநூலாகக் கொள்ளக்கூடியவகையிலே அவரது இராமநாடகக் கீர்த்தனையானது திகழ்கின்றது என்று தமிழிசைஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.